# தமிழின அழிப்பை சட்டபூர்வமாக்கும்
# இலங்கையின் புதிய அரசியல் யாப்பு

## இலங்கை அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையை நாம் ஏன் நிராகரிக்க வேண்டும்?

- வார்த்தைக்கு வார்த்தை "பிளவுபடாத மற்றும் பிரிக்கப்பட முடியாத" இலங்கைக்குள்ளேயே தீர்வு என இந்த இடைக்கால அறிக்கை வலியுறுத்துவதனால்
- பல நூற்றாண்டுகாலமாகப் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினை தீர்வுக்கு "ஏக்கிய ராச்சிய" ஒற்றையாட்சி என்பதையே முன்வைப்பதனால்,
- "ஏக்கிய ராச்சிய" என சொல்லப்படும் சிங்கள சொல்லுக்கு நேரடியாக ஒற்றையாட்சி என மொழிபெயர்க்காமல், "ஒருமித்த நாடு" எனக் கவர்ச்சிமிக்க பசப்பு வார்த்தையினால் தமிழர்களை மீண்டும் ஏமாற்ற நினைப்பதனால்
- தமிழர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு, கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரிப்பதனால்,
- தமிழர்கள் ஓரளவுக்காகவாவது தம்மைத்தாமே நிர்வகித்துக்கொள்ளக்கூடிய வகையில் அமையப்பெறும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து கள்ள மௌனம் காப்பதனால்,
- இலங்கையில் பல மதங்களை பின்பற்றும் மக்கள் வாழ்கின்ற போதிலும் பௌத்தத்திற்கே முன்னுரிமையும், ஆட்சி நிர்வாகத்தில் தனிச்சிறப்பும் அளித்திருக்கின்றமையால்,
- பௌத்தம் முன்னுரிமைப்படுத்தப்பட்டால், சிங்கள மொழிக்கே முதலிடம் என்கின்ற தற்போதைய நிலையை இந்தப் புதிய யாப்பும் இரகசியமாக முன்மொழிகின்றமையால்,
- காணி பிரச்சினை தீர்வுகளுக்குக் கூட மத்திய அரசின் ஆணையின் கீழ் இயங்கும் தேசிய காணி ஆணைக் குழுவின் தலையீட்டை ஏற்படுத்த முனைவதால்,
- போரில் பெரும் பாதிப்புக்குள்ளான தமிழர்களுக்கு நட்டஈடுகள், போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனைகள் அல்லது விசாரணைகள் பற்றி எதுவுமே குறிப்பிடப்படாததனால்,
- தமிழின அழிப்புக்கு வழியமைத்த சிங்கள பௌத்த பேரினவாதத்தை வலுப்படுத்துவதால்,
- தமிழர் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் குறித்து போதிய அக்கறை காட்டாமையினால்,
- தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை, அவர்களுக்கு உரித்தான இறைமை போன்ற விடயங்கள் இவ்விடைக்கால அறிக்கை நிராகரிக்கின்றமையால்
- ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிர்மூலமாக்கும் நோக்கத்தை உடையதால்,
- எமது தாயகத்தின் கடல், நில வளங்களை எந்நேரத்திலும் மத்திய அரசு சுவிகரித்து தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சட்டரீதியான அதிகாரம் வழங்குவதால்.,

**தமிழின அழிப்புக்கு சிறீலங்காவின் அரசியலமைப்புகள் சட்டரீதியில் வழிகோலியமையால் அதனை வரலாற்று ரீதியாக நிராகரித்து வந்த நாம், புதிய அரசியலமைப்பும் செயற்பாடுகளும் அந்த மூல நோக்கத்திலிருந்து வேறுபடாமையால் இந்த அரசியலமைப்பையும் நாம் நிராகரிக்கிறோம்.**

**இந்தக் காரணங்களை தாயகத்தில் வசிக்கும் உங்கள் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்லவும்.**

## புதிய யாப்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும்.

**அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவை**

media.icet@gmail.com | www.iceelamtamils.com

# தமிழின அழிப்பை சட்டபூர்வமாக்கும்
## இலங்கையின் புதிய அரசியல் யாப்பு

### இலங்கை அரசியலமைப்புச் சபையின் வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையை நாம் ஏன் நிராகரிக்க வேண்டும்?

- வார்த்தைக்கு வார்த்தை "பிளவுபடாத மற்றும் பிரிக்கப்பட முடியாத" இலங்கைக்குள்ளேயே தீர்வு என இந்த இடைக்கால அறிக்கை வலியுறுத்துவதனால்
- பல நூற்றாண்டுகாலமாகப் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினை தீர்வுக்கு "ஏக்கிய ராச்சிய" ஒற்றையாட்சி என்பதையே முன்வைப்பதனால்,
- "ஏக்கிய ராச்சிய" என சொல்லப்படும் சிங்கள சொல்லுக்கு நேரடியாக ஒற்றையாட்சி என மொழிபெயர்க்காமல், "ஒருமித்த நாடு" எனக் கவர்ச்சிமிக்க பசப்பு வார்த்தையினால் தமிழர்களை மீண்டும் ஏமாற்ற நினைப்பதனால்
- தமிழர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு, கிழக்கு இணைப்பை முற்றாக நிராகரிப்பதனால்,
- தமிழர்கள் ஓரளவுக்காகவாவது தம்மைத்தாமே நிர்வகித்துக்கொள்ளக்கூடிய வகையில் அமையப்பெறும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து கள்ள மௌனம் காப்பதனால்,
- இலங்கையில் பல மதங்களை பின்பற்றும் மக்கள் வாழ்கின்ற போதிலும் பௌத்தத்திற்கே முன்னுரிமையும், ஆட்சி நிர்வாகத்தில் தனிச்சிறப்பும் அளித்திருக்கின்றமையால்,
- பௌத்தம் முன்னுரிமைப்படுத்தப்பட்டால், சிங்கள மொழிக்கே முதலிடம் என்கின்ற தற்போதைய நிலையை இந்தப் புதிய யாப்பும் இரகசியமாக முன்மொழிகின்றமையால்,
- காணி பிரச்சினை தீர்வுகளுக்குக் கூட மத்திய அரசின் ஆணையின் கீழ் இயங்கும் தேசிய காணி ஆணைக் குழுவின் தலையீட்டை ஏற்படுத்த முனைவதால்,
- போரில் பெரும் பாதிப்புக்குள்ளான தமிழர்களுக்கு நட்டஈடுகள், போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனைகள் அல்லது விசாரணைகள் பற்றி எதுவுமே குறிப்பிடப்படாததனால்,
- தமிழின அழிப்புக்கு வழியமைத்த சிங்கள பௌத்த பேரினவாதத்தை வலுப்படுத்துவதால்,
- தமிழர் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம் குறித்து போதிய அக்கறை காட்டாமையினால்,
- தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளான தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை, அவர்களுக்கு உரித்தான இறைமை போன்ற விடயங்கள் இவ்விடைக்கால அறிக்கை நிராகரிக்கின்றமையால்
- ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நிர்மூலமாக்கும் நோக்கத்தை உடையதால்,
- எமது தாயகத்தின் கடல், நில வளங்களை எந்நேரத்திலும் மத்திய அரசு சுவிகரித்து தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க சட்டரீதியான அதிகாரம் வழங்குவதால்.,

தமிழின அழிப்புக்கு சிறீலங்காவின் அரசியலமைப்புகள் சட்டரீதியில் வழிகோலியமையால் அதனை வரலாற்று ரீதியாக நிராகரித்து வந்த நாம், புதிய அரசியலமைப்பும் செயற்பாடுகளும் அந்த மூல நோக்கத்திலிருந்து வேறுபடாமையால் இந்த அரசியலமைப்பையும் நாம் நிராகரிக்கிறோம்.

இந்தக் காரணங்களை தாயகத்தில் வசிக்கும் உங்கள் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் எடுத்துச் சொல்லவும்.

**புதிய யாப்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும்.**

**அனைத்துலக ஈழத்தமிழர் மக்கள் அவை**

media.icet@gmail.com | www.iceelamtamils.com